**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாரயணசாமி**

**தேதி 19.05.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

அரசுக் கொள்முதல் பணிகளுக்கான **ஜெம் இணைய தளம்**, விளிம்புநிலை மக்களுக்குப் பல புதிய வாய்ப்புகள் வழங்கி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கூடுதல் நீதிபதிகள் உட்பட, அனைத்து உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும், **முழு பென்ஷன் மற்றும் ஓய்வூதியப் பலன்**களுக்கு தகுதி உண்டு என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உணவுப் பதனீட்டுத் துறையில், **வளர்ச்சிக்கு ஏராளமான வாய்ப்புகள்** இருப்பதாக, மத்திய உணவு பதனீட்டுத் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் **மாதிரி இஎஸ்ஐ மருத்துவமனை** அமைக்க, ஊழியர் அரசுக் காப்பீட்டுக் கழகத்திற்கும், மாநில அரசுக்கும் இடையே, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

---

ஜெம் இணை□ தளம் (17)

மத்திய அமைச்சகங்கள், துறைகள், மற்றும், அரசு அலுவலகங்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்தவற்கான ஜெம் இணைய தளம், சிவப்பு நாடா நடைமுறைகளை தவிர்ப்பதன் மூலம், ஏராளமான சேமிப்பை கொடுத்துள்ளதாகவும்.

விளிம்புநிலை மக்களுக்கு, இந்த இணைய தளத்தால், பல புதிய வாய்ப்புகள் திறக்கப் பட்டுள்ளதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். ஜெம் இணைய தளத்தின் வெற்றி குறித்து, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இன்று ஆங்கில நாளேட்டில் எழுதி உள்ள கட்டுரையைப் பகிர்ந்து கொண்டு, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார். வெளிப்படையான நிர்வாகத்தை வழங்குவதற்கான அரசின் முயற்சிகளுக்கு, ஜெம் இணைய தளத்தால் புதிய உத்வேகம் சேர்ந்து இருப்பதாக, அவர் தெரிவித்துள்ளார். அமைச்சர் திரு. பியூஷ் கோயல், ஜெம் இணைய தளம் பற்றிய தமது கட்டுரையில், இந்த இணைய தளத்தால், குறிப்பாக சிறு நகரங்களைச் சேர்ந்த விளிம்புநிலை மக்கள், அதிகாரம் பெற்றுள்ளதாகவும், ஊழல் ஒழிக்கப்பட்டு, பெருமளவில் மக்களின் வரிப்பணம் சேமிக்கப் பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

--------------------------------

*பரம்வீர் சக்ரா* 1 (6)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், கார்கில் போரின் போது அபார வீரச் செயல் புரிந்து, பரம்வீர் சக்ரா விருது பெற்ற, கிரெனேடியர் யோகேந்திர சிங் யாதவ் குறித்து, ஒரு தொகுப்பு

**(வாய்ஸ்)**

*பரம்வீர் சக்ரா* 2 (18)

**(வாய்ஸ்)**

உத்தரபிரதேஷ் மாநிலம், புலந்த்ஷகர் மாவட்டத்தைச் சேர்ந்த கிரெனேடியர் யோகேந்திர சிங் யாதவ், போர்க்கால வீரச் செயலுக்கான மிக உயர்ந்த பரம்வீர் சக்ரா விருதை, மிக குறைந்த வயதில் பெற்றவர் ஆவார். பாகிஸ்தானுக்கு எதிரான கார்கில் போரின் போது, ட்ராஸ் பிரிவில் உள்ள, டைகர் ஹில் மலை உச்சியை இந்தியப் படையினர் கைப்பற்றியதில், யாதவ் ஆற்றிய முக்கிய பங்கிற்காக, பரம்வீர் சக்ரா விருது அவருக்கு வழங்கப்பட்டது. 1999ஆம் ஆண்டு, ஜூலை 3 மற்றும் 4ஆம் தேதிகளுக்கு இடைபட்ட இரவில், டைகர் ஹில் மலை உச்சியை கைபற்றுவதற்காக அனுப்பப்பட்ட படைக் குழுவில் ஒருவராக யாதவ் இடம்பெற்றிருந்தார். மலை உச்சியை எட்டுவதற்கான பாதை மிகவும் செங்குத்தாக, பாறைகள் நிறைந்த, பனி மூடிய பாதையாக இருந்த போதிலும், யாதவ் எந்தவொரு ஆபத்து குறித்தும் கவலைபடாமல், சக வீரர்கள் மலை உச்சியில் ஏறுவதற்கான கயிறுகளை பொருத்தும் பணியில் தாமே முன்வந்து, தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அவர் பாதி தூரம் ஏறி இருந்த நிலையில், பதுங்கு குழியில் இருந்த எதிரியின் கண்ணில் பட்டுவிட்டதால், எதிரி, ராக்கெட்டுகளை ஏவி, இயந்திரத் துப்பாக்கியால் சுடத் தொடங்கியதில், இந்தியப் படைக் குழுவின் தலைவரும், 2 ஜவான்களும் உயிரிழந்ததால், படைக்குழுவின் முன்னேற்றம் தடைப்

பட்டது. கிரெனேடியர் யோகேந்திர சிங் யாதவ், நிலைமையின் தீவிரத்தை உடனடியாக உணர்ந்து, சத்தமின்றித் தவழ்ந்தே, எதிரி நிலைக்கு முன்னேறத் தொடங்கினார். இதனால் அவருக்கு பல காயங்கள் ஏற்பட்ட போதிலும், அதைபற்றியோ அல்லது எதிரிகளின் குண்டு மழைக்கோ கொஞ்சமும் கவலைப்படாமல், அவர் தொடர்ந்து முன்னேறி, கையெறி குண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டும், எதிரிப் படையினர் நால்வரை நேருக்கு நேர் சுட்டுக் கொன்றார். உடலில் பல இடங்களில் காயம்பட்ட நிலையிலும், யாதவ் போர்க் களத்தில் இருந்து அகற்றப்பட மறுத்து, தொடர்ந்து, சண்டையில் ஈடுபட்ட வீரத்தைக் கண்டு, சக வீரர்கள் பேரூக்கம் பெற்று, புதிய உத்வேகத்துடன், எதிரி நிலைகளுக்கு தொடர்ந்து முன்னேறி, இறுதியில் டைகர் ஹில் உச்சியை கைப்பற்றினர். அதி ஆபத்தான போர்ச் சூழலுக்கு இடையிலும், இத்தகைய அபாரத் துணிச்சல், மற்றும் அற்புத மனோ திடத்தை வெளிப்படுத்திய கிரெனேடியர் யோகேந்திர சிங் யாதவிற்கு, கடந்த 2021ஆம் ஆண்டு, நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தன்று, கவுரவ கேப்டன் அந்தஸ்தை, குடியரசுத் தலைவர் வழங்கிச் சிறப்பித்தார். கேப்டன் யாதவ்-வின் வீரத்திற்கும், துணிச்சலுக்கும், நாடு தலை வணங்குகிறது.

--------------------------------

*நீதிபதி பென்ஷன் (11)*

கூடுதல் நீதிபதிகள் உட்பட, அனைத்து உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும், முழு பென்ஷன் மற்றும் ஓய்வூதியப் பலன்களுக்கு தகுதி உண்டு என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. உயர்நீதிமன்ற நீதிபதிகள், எப்போது நியமிக்கப் பட்டார்கள், கூடுதல் நீதிபதியாக ஓய்வு பெற்றார்களா, அல்லது பிற்பாடு, நிரந்தரமாக்கப் பட்டார்களா, என்பதற்கெல்லாம் அப்பாற்பட்டு, முழு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. பி.ஆர். கவாய், நீதிபதி திரு. அகஸ்டின் மாசிஹ் ஆகியோர் அடங்கிய அமர்வு, தனது தீர்ப்பில் கூறியது. ஓய்வூதியம் வழங்குவதில், நீதிபதிகளுக்கு இடையே இவ்வாறு பாரபட்சம் காட்டுவது, அடிப்படை உரிமைகளையும், அரசியல் சாசனப்படியான சமத்துவ உரிமைகளையும், மீறுவதாகும் என்று நீதிபதிகள் கூறினர்.

--------------------------------

*உணவுப் பதனீடு 1 (5)*

உணவுப் பதனீட்டுத் துறையில், வளர்ச்சிக்கு ஏராளமான வாய்ப்புகள் இருப்பதாக, மத்திய உணவு பதனீட்டுத் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் கூறியுள்ளார். இன்று பாட்னாவில், 2 நாள் சர்வதேச வாங்குவோர்-விற்போர் மாநாட்டின் தொடக்க விழாவில் பேசுகையில், அவர் இவ்வாறு கூறினார். இது குறித்து கூடுதல் விவரங்கள்....

**(வாய்ஸ்)**

*உணவுப் பதனீடு 2 (15)*

**(வாய்ஸ்)**

உணவுப் பதனீட்டுத் துறையில், இளைஞர்கள் பங்கேற்க பல வாய்ப்புகள் உள்ளதாகவும். வேலை தேடுபவராக அன்றி, மற்றவர்களுக்கு வேலை கொடுப்பவர்களாக இளைஞர்கள் மேம்பட, இத்துறை மிகவும் பொருத்தமானது என்றும் மத்திய அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் தெரிவித்தார். சின்னஞ்சிறு உணவுப் பதனீட்டுப் பிரிவுகளை பிரதான பொருளாதார நீரோட்டத்தில் சேர்ப்பதற்கான, PM-FME திட்டத்தின் கீழ், இளைஞர்கள் பலர் தொழில் முனைவோராக மேம்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கு இன்னும் சிறந்த சூழல் ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பதில், மாநில அரசுகள், மத்திய அரசுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். உணவுப் பதப்படுத்தும் துறையின் ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலம், பெருமளவில் அந்நிய செலாவணி ஈட்டுவதில் இந்தியா வெற்றி பெற முடியும் என்றும் மத்திய அமைச்சர் குறிப்பிட்டார். பீகார் துணை முதலமைச்சர் திரு. வினய் குமார் சின்ஹா, மாநில தொழில் துறை அமைச்சர் திரு. நிதிஷ் மித்ரா உள்ளிட்டவர்களும், வாங்குவோர்-விற்போர் மாநாட்டின் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர்.

-------------------------------

*புதுச்சேரி இஎஸ்ஐ* (19)

புதுச்சேரியில் மாதிரி இஎஸ்ஐ மருத்துவமனை அமைக்க, ஊழியர் அரசுக் காப்பீட்டுக் கழகத்திற்கும், மாநில அரசுக்கும் இடையே, புரிந்துணர்வு

ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி முன்னிலையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், புதுச்சேரி பிராந்திய இஎஸ்ஐ இயக்குநர் திரு. கிருஷ்ண குமார், சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ரவிச்சந்திரன் ஆகியோர், இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், சுகாதாரத் துறைச் செயலர் திரு. ஜெயந்த் குமார் ரே, தொழிலாளர் துறை ஆணையர் திரு. ஒய்.எல்.என் ரெட்டி உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்த ஒப்பந்தத்தின் கீழ் தற்போது புதுச்சேரி அரசின் நிர்வாகத்தில் உள்ள ESIS மருத்துவமனையை மேம்படுத்தி, இஎஸ்ஐ கழகத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர உத்தேசிக்கப் பட்டுள்ளது. புதுச்சேரியில், 100 படுக்கைகளுடன் அமைய உள்ள மாதிரி இஎஸ்ஐ மருத்துவமனை,பொது சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், இஎஸ்ஐ பயனாளிகள் மேம்பட்ட உயர் சிகிச்சைகளுக்காக தனியார் மருத்துவமனைகளை அணுக வேண்டிய நிலையை தவிர்க்கவும் உதவிகரமாக இருக்கும் என, அரசு செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------------

*புதுச்சேரி ஊர்வலம்* (8)

பெஹல்காம் தாக்குதலுக்கு வெற்றிகரமாக பதிலடி கொடுத்த இந்திய ராணுவத்திற்கு ஆதரவு மற்றும் நன்றி தெரிவிக்கும் வகையிலும், தேசிய ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாகவும், புதுச்சேரியில், பாரதீய ஜனதா கட்சியினர், ஆபரேஷன் சிந்தூர் வெற்றி ஊர்வலம் நடத்தினர். உழவர்கரை மூலக்குளம் சதுக்கத்தில் இருந்து தொடங்கிய இப்பேரணியில், பிஜேபி அகில இந்திய பொது செயலாளர் திரு. துஷ்யந்த் குமார்,மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், மற்றும், மாநில-மாவட்ட-தொகுதி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

-------------------------------

*வானிலை* 1 (18)

தென்மேற்கு பருவமழை இன்று, தெற்கு அரபிக்கடல், மாலத் தீவு, குமரிக் கடல், தெற்கு வங்கக் கடலில், மேலும் ஒருசில பகுதிகளுக்கு பரவி உள்ளது. இது அடுத்த 2-3 நாட்களில், மாலத் தீவு, குமரிக் கடலின் இதர பகுதிகள், தெற்கு அரபிக் கடல், வங்கக் கடலின் மேலும் சில பகுதிகளுக்கு பரவக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தற்போது மத்திய-மேற்கு மற்றும் தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளின் மேல் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. வரும் 21ஆம் தேதி வாக்கில், கர்நாடக கடலோரப் பகுதிகளுக்கு அப்பால், அரபிக் கடலில், வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகி, அதற்கு மறுநாள், காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெறக் கூடும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி-

காரைக்கால் பகுதிகளிலும், பலத்த காற்றுடன், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், நாமக்கல், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, தர்மபுரி உள்ளிட்ட மாவட்டங்களில், ஓரிரு இடங்களில், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில், மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 25ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம்

வானிலை 2 (7)

என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. தென்தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில், சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் வரும் 23ஆம் தேதி வரை, இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியத்தில், 14 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில், 1 செ.மீட்டர் மழை பெய்துள்ளது.

--------------------------------

ஐபிஎல் (5)

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு, லக்னோவில் நடைபெறும் போட்டியில், லக்னோ-ஹைதராபாத் அணிகள் மோத உள்ளன. நேற்று நடைபெற்ற 2 போட்டிகளில், குஜராத் அணி, 10 விக்கெட் வித்தியாசத்தில், டெல்லி அணிக்கு எதிராகவும், பஞ்சாப் அணி,

10 ரன் வித்தியாசத்தில், ராஜஸ்தான் அணிக்கு எதிராகவும் வெற்றி பெற்றன.

-------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

அரசுக் கொள்முதல் பணிகளுக்கான **ஜெம் இணைய தளம்**, விளிம்புநிலை மக்களுக்குப் பல புதிய வாய்ப்புகள் வழங்கி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கூடுதல் நீதிபதிகள் உட்பட, அனைத்து உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும், **முழு பென்ஷன் மற்றும் ஓய்வூதியப் பலன்**களுக்கு தகுதி உண்டு என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உணவுப் பதனீட்டுத் துறையில், **வளர்ச்சிக்கு ஏராளமான வாய்ப்புகள்** இருப்பதாக, மத்திய உணவு பதனீட்டுத் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் **மாதிரி இஎஸ்ஐ மருத்துவமனை** அமைக்க, ஊழியர் அரசுக் காப்பீட்டுக் கழகத்திற்கும், மாநில அரசுக்கும் இடையே, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**